சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. P.V.சாண்டிலியன்.,எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2024-ம் ஆண்டு ஜுன் திங்கள் 27-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.5/2024.

இன்

அசல் வழக்கு எண்.101/2016

....

நாகராஜன் .. மனுதாரர்/வாதி

..எதிர்..

K.N.கண்ணப்ப சுப்பிரமணியன் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 20.06.2024 ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.சோமநாதன் அவர்கள் ஆஜராகியும் ,எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு . சி. ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

வாதுரைக்காக ஏற்பட்ட தாவா வழக்கை மீண்டும் Re-Open செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கிலும் வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு விசாரணை முடிந்து இருதரப்பிலும் வாதுரை செய்வதற்காக 25.03.2024-ல் வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வா.சா.ஆ.1 ஐ தன் கைப்பட எழுதிய பிரதிவாதி அதை தான் எழுத வில்லை எனவும் அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை எனவும்

பொய்யாக வாக்கு மூலத்தில் கூறியுள்ளார். எனவே பிரதிவாதியை Re-call செய்து இந்நீதிமன்றத்திற்கு முன்பாக வா.சா.ஆ.1-ல் உள்ள எழுத்துக்களை எழுதச் சொல்லி அவ்வாறு எழுதப்படும் எழுத்தை வா.சா.ஆ.1 எழுத்தோடு ஒப்பிட்டு பார்க்க தாவா வழக்கை Re-Open செய்ய மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்

மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே நான்கு சாட்சிகளை விசாரித்துள்ளார்கள். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். தற்போது அசல் வழக்கானது வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதி வேண்டுமென்றே உடல்நலம் பாதிக்கப்பட்ட எதிர்மனுதாரர்/ பிரதிவாதியை வீண் அலைக்கழிவு செய்யும் எண்ணத்துடன் கடந்த 8 வருட காலமாக அசல் வழக்கை நடத்தி தற்போது இந்த தாவா மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர்/வாதி தரப்பு மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை . சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை . இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புக்கள் பார்வையிடப்பட்டன.

6. கடந்த 25.04.1999 தேதியிட்ட கிரைய எக்ரிமெண்ட் படி வாதி பெயருக்கு பிரதிவாதி கிரையப்பத்திரம்ட எழுதி பதிந்து தர உத்தரவு பிறப்பிக்கக்கோரி மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரான வாதி தரப்பு வழக்கை மெய்பிப்பதற்கு வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையில் சாட்சி கையொப்பம் செய்துள்ள K.N.ராதாகிருஷ்ணன் என்பவரை விசாரணை

செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டு நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 27-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி
சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்
தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2024.06.27 17:25:22 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

Subordinate Court
Sivagangai

I.A.No.5/2024,
in
O.S.No.101/2016
in
**Draft/Fair/Order**
27.06.2024.